இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 17-06-2024

“அரசியலில் அபூர்வம்! அரசியலில் அற்புதம்!”

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வெற்றியை ‘இந்தியா’ கூட்டணி தமிழ்நாட்டில் பெற்றது. புதுச்சேரி உள்ளிட்ட நாற்பது தொகுதிகளிலும் முழுமையான வெற்றியைக் கைப்பற்றியதன் மூலமாக ‘இந்தியா’ கூட்டணியின் கோட்டையாக தமிழ்நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. மற்ற மாநிலங்களில் கூட ஒரு தொகுதி, இரண்டு தொகுதியை பா.ஜ.க. கைப்பற்றியது. ஆனால் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் பம்மாத்து பலிக்கவில்லை. பின்னங்கால் பிடறியில் அடிபட விரட்டப்பட்டது பா.ஜ.க.

“நாங்கள் தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை” என்று பா.ஜ.க. கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தில் கண்ணீரோடு தழு தழுக்கச் சொன்னார் நரேந்திரமோடி. ஏன் வெற்றி பெற முடியவில்லை என்ற காரணத்தைச் சொல்லவில்லை. அதை அவரும் உணர்ந்ததாகவும் தெரிய வில்லை. உணர்ந்தாலும் சொல்லவும் மாட்டார். சொல்லவும் முடியாது.

பா.ஜ.க.வை அரசியல் ரீதியாக மட்டுமல்ல, தேர்தல் அரசியலுக்காக மட்டுமல்ல, கொள்கை ரீதியாக விமர்சித்து அதன் முகத்திரையைக் கிழித்து வரும் கூட்டணியாக திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான இந்தியாக் கூட்டணி செயல்பட்டு வருகிறது. அதுவும் இந்தத் தேர்தலுக்கு முன்னதாக உருவான கூட்டணி அல்ல இது. ஐந்தாண்டு காலமாக பாசிச பா.ஜ.க.வுக்கு எதிராக ஜனநாயகப் போர் நடத்தி வரும் கூட்டணி இது. பாசிச பா.ஜ.க.வை வளர்ப்பது, இந்தியாவுக்கே ஆபத்தானது என்பதை அடித்தளம் வரை பரப்புரை செய்து வைத்திருந்ததால் தான் இந்த வெற்றியை தமிழ்நாட்டில் பெற முடிந்தது.

“பா.ஜ.க.வுக்கு வாக்களிப்பது அவமானம் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்” என்று தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் பரப்புரை செய்தார்கள். இதனைத் தமிழ்நாட்டு மக்கள் உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதன் அடையாளம் தான் நாற்பதுக்கு நாற்பது எனப் பெற்ற வெற்றியாகும். இந்த வெற்றிகரமான முடிவுக்கான வெற்றி விழா தான் நேற்றைய தினம் கோவையில் நடந்த வெற்றிகரமான விழா ஆகும்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - நாற்பதுக்கு நாற்பது வெற்றியைத் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா - இந்த வெற்றிக்கு இந்தியாக் கூட்டணித் தலைவர்களை அழைத்துச் சென்ற மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு முப்பெரும் விழாவாக கோவையில் கொண்டாடப்பட்டது. இந்த மேடையிலும் ‘இந்தியா’ கூட்டணியின் ஒற்றுமையே புலப்பட்டது.

‘செய்கூலி, சேதாரம் இல்லாமல் முழுமையாகக் கிடைத்த வெற்றி’ என்று இதனை உருவகப்படுத்தினார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும், ‘இந்த வெற்றியை சாதித்துக் காட்டியது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான்’ என்று புகழ் மாலை சூட்டினார்கள். ‘உங்களால் மட்டும் எப்படி முழுமையான வெற்றி சாத்தியமானது என்று அகில இந்தியத் தலைவர்கள் அனைவரும் ஆச்சர்யமாகப் பார்க்கிறார்கள்’ என்றார் காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை. ‘தி.மு.க.வுக்கு செல்வாக்கான தொகுதியைக் கூட கூட்டணிக் கட்சிக்கு ஒதுக்கி, எங்களுக்கு பலவீனம் என்று தெரிந்த தொகுதியை தாங்கள் எடுத்துக் கொண்டு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்ட பாங்கு தான் இந்த வெற்றிக்குக் காரணம்’ என்றார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் பாலகிருஷ்ணன். ‘இங்கே தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைப் போலவே மற்ற மாநிலங்களிலும் தலைவர்கள் செயல்பட்டு இருந்தால் இந்தியா கூட்டணி ஆட்சியையே பிடித்திருக்கும்’ என்றார் இந்தியக் கம்யூனிஸ்ட் செயலாளர் முத்தரசன்.

விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்திருமாவளவனின் உரை உணர்ச்சியின் துடிப்பாக மட்டுமல்ல, உண்மையின் வெடிப்பாக அமைந்திருந்தது. **“சிதம்பரம் தொகுதியில் நான் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகிய இரண்டு அமைச்சர்களைப் போட்டார் முதலமைச்சர் அவர்கள். ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை எம்.ஆர்.கே.விடம் பேசிக் கொண்டே இருந்தார் முதலமைச்சர். தங்கள் கட்சி வெற்றி பெற்றால் போதும் என்று நினைக்காமல் அனைவரும் வெற்றி பெற வேண்டும் என்று நினைத்தார். தி.மு.க. வலிமை பெற்ற தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுக்கு வழங்கி, ரிஸ்க்கான தொகுதிகளில் நாங்கள் போட்டியிடுகிறோம் என கூட்டணிக் கட்சிகளையும் தனது கட்சியாக எண்ணி வெற்றி பெற வைத்த பெருமை அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு. இதுதான் அரசியலில் அபூர்வம்! அரசியலில் அற்புதம்”** என்றார் தொல்.திருமா.

இவை அனைத்துக்கும் பிறகு இறுதியாக உரையாற்ற வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வெற்றியை தி.மு.க. உடன்பிறப்புகளுக்கும், இந்தியா கூட்டணி தொண்டர்களுக்கும், அனைத்துத் தலைவர்களுக்கும்உரித்தாக்கிஉயர்ந்துநின்றார். **“இரத்தத்தைவியர்வையாகச் சிந்தி - காலத்தை தனது கடமைகளுக்காக மட்டுமே ஒப்படைத்து - 40 மட்டும் தான் நமது இலக்கு - என்ற அடிப்படையில் உழைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டன் - தோழன் உடன்பிறப்பு அத்தனை பேரும் இருக்கும் திசையை நோக்கி நான் வணங்குகிறேன்”** என்று தனக்கு போட்ட புகழ்மாலைகள் அனைத்தையும் தொண்டனுக்கு அணிவித்தார் தலைவர்.

“இவை தனிப்பட்ட ஸ்டாலினுக்கு கிடைத்த பாராட்டு அல்ல, மேடையில் இருக்கும் அனைத்துத் தலைவர்களுக்கும் உரிய பாராட்டு” என்று சொல்லி நிறைகுடமாக நின்றார் தலைவர்.

ஆம்! இன்றைய அரசியலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அபூர்வமான தலைவரே ஆவார். அவர் நிகழ்த்திய அற்புதமே இந்த வெற்றி!

நாகை மாவட்டக் கழகக் கூட்டம்!

நாகை, ஜூன் 17–

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதமன் பேசினார்.

உடன் தாட்கோ தலைவர் உ. மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், க.ராஜேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணி வண்ணன், கற்பகம், மாவட்டக் கழகப் பொருளாளர் மு.லோகநாதன் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு, கண்ட்டோன்மென்ட் பகுதியில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட காவேரி மருத்துவமனை புதிய கிளையை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி. திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், காவேரி மருத்துவமனை நிர்வாகிகள் சந்திரகுமார், மணிவண்ணன், செங்குட்டுவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் கூடி ஆலோசனை நடத்திய பிறகே

மக்களவைத் தலைவரை முடிவு செய்ய வேண்டும்!

பா.ஜ.க.வுக்கு தெலுங்கு தேசம் கட்சி வலியுறுத்தல்!

அமராவதி, ஜூன் 17–

நடந்து முடிந்துள்ள மக்களவை தேர்தலில் ஆட்சி அமைக்க தேவையான பெரும்பான்மை இடங்களான 272 இடங்களை பா.ஜ.க. பெறவில்லை. 240 இடங்களை மட்டுமே அக்கட்சி பெற்றுள்ளது. இதனால் தெலுங்குதேசம் கட்சியின் 16 எம்.பி.க்கள் மற்றும் ஜக்கிய ஜனதாதளம் கட்சியின் 12 எம்.பி.க்கள் மற்றும் சில கட்சி எம்.பிக்களின் ஆதரவுடன் பிரதமராக மோடி பதவி ஏற்றுள்ளார்.

இந்நிலையில், வரும் 24ஆம் தேதி புதிய மக்களவை கூடுகிறது. முதல் இரண்டு நாட்கள் எம்.பி.க்கள் பதவி ஏற்பு நடைபெறும். 26 ஆம் தேதி சபாநாயகர் தேர்வு நடைபெற உள்ளது.

சபாநாயகர் பதவி பா.ஜ.க.விடம் சென்றால் மக்களவையில் குதிரை பேரம் மூலம் எம்.பி.க்கள் விலை பேசப்பட்டு பா.ஜ.க.வுக்கு இழுக்கப்படுவார்கள் எனவும், மக்களவை முன்பு போல் ஒருதலை பட்சமாக செயல்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் அசோக் கெலாட் உள்ளிட்டோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, தங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராக தேர்வு செய்யப்பட வேண்டும் என தெலுங்கு தேசம் கட்சி வலியுறுத்தி வருகிறது. என்.டி.ஏ. கூட்டணி கட்சிகள் ஒன்று சேர்ந்து சபாநாயகர் யார் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்று தெலுங்கு தேசம் கட்சியின் செய்தி தொடர்பாளர் பட்டாபிராம் கொம்ம ரெட்டி கூறியுள்ளார்.

ஜக்கிய ஜனதா தளத்தைப் பொறுத்த அளவில் பா.ஜ.க. முன்னிலைப்படுத்தும் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாக கூறியுள்ளது.

தெலுங்கு தேசம் கட்சி வேட்பாளரை நிறுத்தாவிட்டால் முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கிற கோரிக்கைகளும் தற்போது எழுந்துள்ளன.

‘நீட்’ கேள்வித்தாள் முறைகேடு! மேலும் 9 மாணவர்களுக்கு சம்மன் - பீகார் மாநில போலீஸ் நடவடிக்கை!

பாட்னா, ஜூன் 17–

பீகார் மாநில நீட் தேர்வு முறைகேடுகளில் தொடர்புடைய மேலும் 9 மாணவர்களுக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு அம்மாநில போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர்.

மே 5ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வின் போது கேள்வித்தாள் கசிந்ததாக பீகார் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் இதுவரை 4 மாணவர்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனிடையே நீட் கேள்வித்தாள் கசிந்ததற்கான கூடுதல் ஆதாரங்கள் கிடைத்திருப்பதை தொடர்ந்து 9 மாணவர்களை விசாரணைக்கு ஆஜராகுமாறு பீகார் பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். தேசிய தேர்வு முகமையிடமிருந்து கூடுதல் ஆவணங்களை பெற்று அதன் மூலம் இந்த 9 மாணவர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. உத்திர பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் பீகாரைச் சேர்ந்த 9 மாணவர்களுக்கு நீட் கேள்வித்தாள் மற்றும் வினாத்தாள் வழங்கப்பட்டதாகவும், கேள்வித்தாள் கசிவு விவகாரத்தில் இந்த 9 மாணவர்களுக்கு தொடர்பு உள்ளதாகவும் போலீசார் சந்தேகிக்கின்றனர். நீட் கேள்வித்தாள் கசிந்ததை உறுதி செய்யும் ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக பீகார் கூடுதல் டி.ஜி.பி. தெரிவித்திருந்த நிலையில் இந்த புதிய சம்மன் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, நீட் தேர்வுக்கு எதிராக ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வீடு முன் கடந்த 13 ஆம் தேதி போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது டெல்லி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். அனுமதி இல்லாமல் முக்கிய பிரமுகர்கள் உள்ள பகுதியில் 144 தடை உத்தரவை மீறி போராட்டம் நடத்தியதாகக் கூறி மாணவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் தினம் 400 பேர் பயணிக்க

திருப்பதி தொகுப்பு ஒரு நாள் சுற்றுலா திட்டம்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 17-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு நாள் சுற்றுலா திட்டமான, திருப்பதிதொகுப்பு சுற்றுலா திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 400 நபர்கள் வரை சுற்றுலா செல்லலாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் இயக்கப்பட்டு வரும் சுற்றுலா திட்டங்களில் அதிக அளவில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் சுற்றுப்பயணம், திருப்பதி ஒரு நாள் சுற்றுலாவாகும். திருப்பதி சுற்றுலா செல்லும் பேருந்து, சென்னை வாலாஜாசாலை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திலிருந்து தினசரி காலை 4.30 மணிக்குசுற்றுலாபயணிகளைஅழைத்துசெல்கின்றது.

ஒவ்வொரு பேருந்திலும் சுற்றுலா பயணிகளுக்கு ஒரு சுற்றுலா வழிகாட்டி பணியில் ஈடுபடுவார். வழிகாட்டிகள் திருப்பதி சுற்றுலா பயணிகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுற்றுலா பயணத்திற்கான விளக்கங்களை அளிப்பார். சுற்றுலா பயணிகளுக்கு காலை உணவு திருத்தணி ஓட்டல் தமிழ்நாடு உணவகத்தில் வழங்கப்படுகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு, திருப்பதி தேவஸ்தானம் சிறப்பு அனுமதியாக வழங்கிய விரைவு தரிசன அனுமதி சீட்டின் மூலம் சுற்றுலா பயணிகள் தரிசனம் செய்த பின்னர் சுற்றுலா

பயணிகள் அனைவருக்கும் நபர் ஒருவருக்கு திருப்பதி லட்டு ஒன்று வழங்கப்படுகின்றது. மேலும் மதிய உணவுக்கு பின் திருச்சானூர் சென்று பத்மாவதி அம்மனை தரிசனம் செய்த பிறகு இரவு உணவு வழங்கப்பட்டு மீண்டும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் சுற்றுலா பயணிகளை கொண்டு சேர்த்து திருப்பதி சுற்றுலா பயணம் முடிவு பெறுகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்களுக்கு முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்www.ttdconline.com இணையதள பக்கத்திலும், அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவும் முன்பதிவு செய்யலாம்.

திருப்பதி சுற்றுலா குறித்த கூடுதல் விவரங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தொலைபேசி எண்களை (180042 531111 (Toll free), 044 25333333 மற்றும் 044 25333444) தொடர்பு கொண்டு பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இராயபுரத்தில் பொதுக்கூட்டம்!

சென்னை, ஜூன் 17–

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லயோலா மதன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். கழக மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் க. அமுதரசன் சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர், மற்றும் பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக, பகுதி கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

வாணியம்பாடி தொகுதி ஆலங்காயம் கிழக்கில் இன்று

டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நன்றி தெரிவிக்கிறார்!

திருப்பத்தூர், ஜூன் 17-

வேலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் இன்று (17.6.2024) வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி ஆலங்காயம் கிழக்கு ஒன்றியத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் பொது மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

காலை 8.30 மணியளவில் நாயக்கனூர், பீமகுளம் ஊராட்சிகளில் தனது நன்றி அறிவிப்பை தொடங்கும் அவர், மாலை 6 மணியளவில் 14 இடங்களில் நன்றி தெரிவித்தபின் வளையர்பட்டு நெக்கான மலையில் முடிக்கிறார்.

முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் ஆணையின்படி தருமபுரி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாரதிபுரம் 66 அடி சாலையில் வெண்ணாம்பட்டி ரயில்வே மேம்பாலம் ரூ.36.15 கோடி மதிப்பில் ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடம் மற்றும் சிப்காட் பணிகள் குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்.வழக்கறிஞர் ஆ.மணி, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் பிரின்சிலி ராஜ்குமார், வட்டாச்சியர் ஜெயசெல்வம் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.